## வகுப்பு - 7 - பருவம் - 1 - தாவரவியல்

## 5 - தாவரங்களின் இனப்பெருக்கம் மற்றும் மாற்றுருக்கள்

**பயிற்சி வினாக்கள்:**

1. இலைகளின் மூலம் உடல் வழி இனப்பெருக்கம் நடத்துவது ______.

   (1) பிரையோபில்லம் (2) பூஞ்சை (3) வைரஸ் (4) பாக்டீரியா

2. ஈஸ்ட்டின் பாலிலா இனப்பெருக்க முறை ______.

   (1) ஸ்போர்கள் (2) துண்டாதல் (3) மகரந்தச் சேர்க்கை (4) மொட்டு விடுதல்

3. ஒரு தாவரத்தின் இனப்பெருக்க உறுப்பு ______.

   (1) வேர் (2) தண்டு (3) இலை (4) மலர்

4. மகரந்தச் சேர்க்கையாளர்கள் என்பவை ______.

   (1) காற்று (2) நீர் (3) பூச்சிகள் (4) மேற்கூறிய அனைத்தும்

5. பற்றுவேர்கள் காணப்படும் தாவரம் ______.

   (1) வெற்றிலை (2) மிளகு (3) இவை இரண்டும் (4) இவை இரண்டும் அல்ல

6. மலரின் ஆண் இனப்பெருக்க உறுப்பு ______.

   (1) அல்லி வட்டம் (2) புல்லி வட்டம் (3) மகரந்தத்தாள் வட்டம் (4) சூலக வட்டம்

7. ______ என்பது சூலக வட்டத்தில் பருத்த அடிப்பகுதியாகும்.

   (1) சூற்பை (2) விதை (3) சூல் முடி (4) பூக்காம்பு

8. கருவுறுதலுக்குப் பின் சூல் ______ ஆக மாறுகிறது.

   (1) கனி (2) விதை (3) அல்லி இதழ் (4) புல்லி இதழ்

9. சுவாச வேர்கள் ______ தாவரத்தில் காணப்படுகின்றன.

   (1) ஆலமரம் (2) கஸ்குட்டா (3) அவசீனியா (4) கரும்பு

10. வெங்காயம் மற்றும் பூண்டு ______ வகைக்கு எடுத்துக்காட்டுகளாகும்

    (1) மட்டநிலத்தண்டு (2) கந்தம் (3) கிழங்கு (4) குமிழம்

11. பின்வருவனவற்றுள் இனப்பெருக்க உறுப்புகள் அல்லாதது எது?

    (1) மலர்கள் (2) வேர் (3) கனிகள் (4) விதைகள்

LIVEWORKSHEETS

12. தாவரங்களும், விலங்குகளும் இளம் உயிரிகளை உருவாக்கி தங்களது எண்ணிக்கையை அதிகரிக்கும் நிகழ்ச்சியே _______ எனப்படும்

(1) மகரந்தச் சேர்க்கை (2) கருவுறுதல் (3) இனப்பெருக்கம் (4) துண்டாதல்

13. கூற்றுகளை ஆராய்க.

(1) விதைகளின் வழியே நடைபெறும் இனப்பெருக்கம் பாலிலா இனப்பெருக்கம்

(2) விதைகள் இல்லாமல் நடைபெறும் இனப்பெருக்கம் பாலினப் பெருக்கம்

(1) 1 மட்டும் சரி (2) 2 மட்டும் சரி

(3) 1 மற்றும் 2 இரண்டும் சரி (4) 1 மற்றும் 2 இரண்டும் தவறு

14. மாமரத்தின் இனப்பெருக்கப் பகுதி _______.

(1) விதை (2) தண்டு (3) போத்துநடுதல் (4) பதியன் போடுதல்

15. பின்வருவனவற்றுள் பதியன் போடுதல் மூலம் இனப்பெருக்கம் செய்யும் இயல்புடையவை _______.

i. ரோஜா ii. மல்லிகை iii. செம்பருத்தி iv. புளியமரம்

(1) i (2) i, ii (3) i, ii, iii (4) அனைத்தும்

16. பின்வருவனவற்றுள் தண்டின் மூலம் இனப்பெருக்கம் செய்யும் தாவரம் _______.

(1) மாமரம் (2) தென்னைமரம் (3) உருளைக் கிழங்கு (4) பூசணிக்கொடி

17. மகரந்தச் சேர்க்கை மற்றும் _______ மூலமாக ஒரு மலரிலிருந்து விதைகள் உருவாகின்றன

(1) துண்டாதல் (2) மொட்டு விடுதல் (3) கருவுறுதல் (4) ஸ்போர் உருவாதல்

18. பின்வருவனற்றுள் எது மகரந்தத்தாள் வட்டத்தின் பாகம் அல்ல?

(1) சூல் (2) மகரந்தப்பை (3) மகரந்தக் கம்பி (4) மகரந்தத்தாள்

19. மலரின் பசுமையான பகுதி _______.

(1) அல்லி இதழ் (2) புல்லி இதழ் (3) மகரந்தத்தாள் (4) சூலகம்

20. மலரின் பெரியதான பாகம் எது?

(1) அல்லி இதழ் (2) புல்லி இதழ் (3) மகரந்தத்தாள் (4) சூலகம்

21. மலரின் பிரகாசமான வண்ணத்துடன் மற்றும் நறுமணத்தோடும் காணப்படும் பகுதி _______.

(1) சூலகம் (2) அல்லி (3) புல்லி (4) மகரந்தத்தாள்

22. **கூற்று**: மலரில் பூச்சிகளை கவர்ந்திழுக்கக்கூடிய பகுதியாக அல்லி வட்டம் உள்ளது.

LIVEWORKSHEETS

**காரணம்:** ஏனெனில், அல்லி பிரகாசமான வண்ணத்துடன் கவர்ச்சியாகவும், இனிய நறுமணத்தோடும் உள்ளது.

(1) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்

(2) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

(3) கூற்று சரி, காரணம் தவறு

(4) கூற்று தவறு, காரணம் சரி

23. **கூற்று:** நெப்பந்தஸ் தாவரத்தில் இலைகள் குடுவைகளாக மாறி, பூச்சிகளையும் சிறு விலங்குகளையும் கவர்ந்து இழுக்கின்றன

**காரணம்:** பொட்டாசியம் ஊட்டச்சத்து இல்லாத இடத்தில் வாழும் தாவரங்கள் அவற்றைப் பெறுவதற்கேற்ப தம்மை மாற்றிக் கொள்கின்றன.

(1) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்

(2) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

(3) கூற்று சரி, காரணம் தவறு

(4) கூற்று தவறு, காரணம் சரி

24. **கூற்று:** அகேஷியா ஆரிகுலிபார்மிஸ் தாவரத்தில் இலைக்காம்பு நீண்டு பற்றுக் கம்பிகளாக மாறியுள்ளன.

**காரணம்:** இலை செய்ய வேண்டிய ஒளிச்சேர்க்கைப் பணியை மேற்கொள்வதற்காக இவ்வாறு மாறியுள்ளது.

(1) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்

(2) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

(3) கூற்று சரி, காரணம் தவறு

(4) கூற்று தவறு, காரணம் சரி

25. **கூற்று:** பூவில் நடைபெறும் மகரந்தச் சேர்க்கை மற்றும் கருவுறுதல் கனிகளையும் விதைகளையும் உருவாக்குகிறது

**காரணம்:** கருவுறுதலுக்குப் பின் சூற்பை கனியாக மாறுகிறது. சூலானது விதைகயாக மாறுகிறது

(1) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்

LIVEWORKSHEETS

(2) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

(3) கூற்று சரி, காரணம் தவறு

(4) கூற்று தவறு, காரணம் சரி

26. **கூற்று**: கூம்பு வடிவ வேருக்கு எடுத்துக்காட்டு கேரட் ஆகும்

**காரணம்**: இது வேற்றிட வேரின் மாறுபாடாகும்

(1) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்

(2) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

(3) கூற்று சரி, காரணம் தவறு

(4) கூற்று தவறு, காரணம் சரி

27. **கூற்று**: வாண்டா போன்ற தொற்றுத் தாவரங்களின் வேர்களில் வெலமன் திசு என்ற உறிஞ்சும் திசு காணப்படுகிறது

**காரணம்**: இவை காற்றின் ஈரப்பதத்தை உறிஞ்சி ஒளிச்சேர்க்கைக்கு உதவுகிறது

(1) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்

(2) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

(3) கூற்று சரி, காரணம் தவறு

(4) கூற்று தவறு, காரணம் சரி

28. **கூற்று**: வறண்ட நிலத்தாவரங்களில் இலைகள் முட்களாக மாறியுள்ளன

**காரணம்**: ஏனெனில் ஆடு, மாடுகள் உண்ணாமல் பாதுகாத்துக் கொள்வதற்காக இவ்வாறு மாற்றுரு அடைந்துள்ளது

(1) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்

(2) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

(3) கூற்று சரி, காரணம் தவறு

(4) கூற்று தவறு, காரணம் சரி

29. **கூற்று**: அவிசீனியா தாவரம் தூண் வேர்களைக் கொண்டுள்ளது.

**காரணம்**: சுவாசிக்கும் வேர்களில் நிமட்டோஃபோர்கள் காணப்படும்.

(1) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்

LIVEWORKSHEETS

(2) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

(3) கூற்று சரி, காரணம் தவறு

(4) கூற்று தவறு, காரணம் சரி

30. **கூற்று**: கஸ்குட்டா உறிஞ்சும் வேர்களை உடைய தாவரம் ஆகும்.

**காரணம்**: உறிஞ்சும் வேர்களில் சிறப்பு உறுப்பு ஹாஸ்டோரியா ஆகும்.

(1) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்

(2) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

(3) கூற்று சரி, காரணம் தவறு

(4) கூற்று தவறு, காரணம் சரி

31. நிமட்டோஃபோர்கள் உடைய தாவரம் எது?

(1) அவிசினியா (2) கஸ்குட்டா (3) கரும்பு (4) இஞ்சி

32. ஹாஸ்டோரியா உடைய தாவரம் _______.

(1) மஞ்சள் (2) உருளைக் கிழங்கு (3) கஸ்குட்டா (4) அவிசினியா

33. ஒவ்வொரு மகரந்தத்தாளும் எத்தனை பாகங்களைக் கொண்டது?

(1) 1 (2) 2 (3) 3 (4) 4

34. ஊமத்தை மலரில் உள்ள மகரந்தத்தாள்களின் எண்ணிக்கை _______.

(1) 4 (2) 5 (3) 7 (4) 6

35. மொட்டினை மூடிப் பாதுகாக்கும் மலரின் பாகம் _______.

(1) அல்லி இதழ் (2) புல்லி இதழ் (3) மகரந்தத்தாள் வட்டம் (4) சூலக வட்டம்

LIVEWORKSHEETS